# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 23–ஆம் நாள், புதன்கிழமை

## இ.ம.எண்.5/2025 இன் அ.வ.எண்.248/2001

## CNR No. TNSA13-000193-2001

1. சாந்தி
2. பாலதண்டாயுதன்
3. செங்கொடி . . . மனுதாரர்கள்/8, 9, 10 பிரதிவாதிகள்

/எதிராக/

1. மதிவாணன்
2. அருள்
3. சாந்தா . . . எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 22.07.2025ம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள்/8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N. ராமதாஸ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.S.ராஜாகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்கள்/8 முதல் 10 பிரதிவாதிகள் இம்மனுவை கூடுதல் எழுவினாக்கள் வனையவேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 14 விதி 5 ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2. **<u>மனுதாரர்கள்/8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>**

மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் 8ம் பிரதிவாதி என்றும், இம்மனுவை தனக்காகவும், 2, 3 மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் இறந்துபோன 1ம் மனுதாரரின் கணவர் கண்ணன் அவர்களை 3ம் பிரதிவாதியாக வாதிகள் தவறாக சேர்த்துள்ளதாகவும், அவரின் இறப்பிற்கு பின் மனுதாரர்களை 8 முதல் 10 பிரதிவாதிகளாக சேர்த்துள்ளதாகவும், மனுதாரர்களுக்கும் மேற்படி வழக்கிற்கோ மேற்படி சொத்திற்கோ எவ்வித தொடர்பும் இல்லை என்றும், 1ம் பிரதிவாதி, இந்த மனுதாரர்களின் பக்கத்து காட்டுக்கார நண்பர் என்பதால் தங்களின் சொத்துக்களை சட்ட விரோதமாக பறிக்க அவரது நண்பரான 1ம் மனுதாரரின் கணவரை இவ்வழக்கில் சேர்த்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

வழக்கு சொத்தானது ஆரம்பத்திலிருந்தே 1ம் பிரதிவாதி சின்னப்பனுக்குதான் சொந்தமானது என்றும், அவர்தான் அதில் சுவாதீனத்தில் இருந்து, வழக்கு சொத்து அபிவிருத்திக்காக கடன்களை ஸ்டேட்பாங்கிலும், சொசைட்டியிலும் வாங்கியுள்ளதாகவும், அவரின் தாய் தகப்பன் இறந்த பிறகு வழக்கு நிலத்தில் தான் அடக்கம் செய்துள்ளனர் என்றும், இந்நிலையில் உண்மை நிலையை மறைத்து அவரின் நண்பரான மனுதாரரின் கணவரையும், அவர் மறைவுக்கு பிறகு 8 முதல் 10 மனுதாரர்களையும் இவ்வழக்கில் தவறாக சேர்த்துள்ளனர் என்றும், எனவே மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு தேவையற்ற நபர்கள் என்றும், எனவே அவர்களுக்கு பெரும் சங்கடங்கள் ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டிருந்த 4ம் பிரதிவாதி அம்பாயிரம், 5ம் பிரதிவாதி ராமசாமி, 7ம் பிரதிவாதி கோவிந்தசாமி ஆகியோர்கள் ஏற்கனவே இறந்துவிட்டதாகவும், அவர்களின் குடும்ப வாரிசுகளை இவ்வழக்கில் வேண்டுமென்றே சேர்க்கவில்லை எனவும், அவர்கள் பெரும்குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதாலும், அவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தவும்,

மனுதாரர்களை சேர்த்தும், அவர்களை சேர்க்காமலும் உள்ளதாகவும், இது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், எனவே இதுபற்றி எழுவினாக்கள் வனையப்பட வேண்டியது அவசியம் என இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

3. **<u>2ம் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்து 1, 3 எதிர்மனுதாரர்/வாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

எதிர்மனுதாரர்கள் தங்களது எதிருரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார்கள். இவ்வழக்கில் இந்த மனுதாரரின் கணவர் 3ம் பிரதிவாதியான கண்ணன் உட்பட அனைத்து பிரதிவாதிகளாலும் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு சமூகம் நீதிமன்றத்தால் 11.04.2002ம் தேதியில் இருதரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரை மற்றும் பதிலுரையினை தெளிவாக ஆராய்ந்து ஏற்கனவே எழுவினாக்கள் எழுப்பப்பட்டு வாதி சாட்சி சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வாதி தரப்பில் கடந்த 22.03.2016ம் தேதியன்று சாட்சியம் முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.3 வரையான சாட்சிகளுடன் விசாரணை முடிக்கப்பட்டு கடந்த 19.06.2025ல் சமூகம் நீதிமன்றத்தில் கூடுதல் பதிலுரையில் தெளிவாக ஆராய்ந்து கூடுதல் எழுவினாக்கள் எதுவும் தேவையில்லை என்று முடிவு செய்தது என்றும், அதன்பிறகு ஏழு வாய்தாக்கள் முடிந்து பி.வா.சா.3ன் சாட்சியை முழுமையாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்ட பின்னிட்டு மேற்படி மனுவினை எவ்வித முகாந்திரமும் இன்றி தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?

6. மனுதாரர்கள்/8 முதல் 10 பிரதிவாதிகள் இம்மனுவை கூடுதல் எழுவினாக்கள் வனைய வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி இறந்த பிறகு அவரது வாரிசுகளான 8 முதல் 10 பிரதிவாதிகள்

தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். ஆனால் 4, 5, 7 பிரதிவாதிகளும் இறந்துள்ள நிலையில் அவர்களது வாரிசுகள் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்பதை அறிய முடிகிறது. எதிர்மனுதாரர்கள் / வாதிகள் இவ்வழக்கை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள நிலையில் இறந்து போன பிரதிவாதிகளின் வாரிசுகளை இவ்வழக்கின் தரப்பினர்களாக சேர்க்காமல் உள்ளது தெரிய வருகிறது. எனவே மனுதாரர்களின் மனுவையும், கூடுதல் பதிலுரையையும் ஆராய்ந்து பார்க்கையில் கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட வேண்டும் என மனுதாரர்கள் மனுவில் கூறிய காரணங்கள் ஏற்கத்தக்கதாகவே உள்ளது. எனவே இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. தீர்வு:

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஜுலை திங்கள், 23–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.07.23 17:57:05 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

<u>மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.07.23 17:57:20 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**

அசல்/வரைவு/ உத்தரவு
இ.ம.எண். 5/2025 இன்
அ.வ.எண். 248/2001
நாள் : 23.07.2025